## 2 கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

## O.S.No.228/2024

16.06.2026 வா.சா.2 திரு. கிருஷ்ண ராஜ்

(வா.சா.2 ன் சாட்சிய வாக்குமூலம் உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.)

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வழக்கு சொத்தின் விஸ்தீரணம் 2 ஏக்கர் 93 செண்ட் ஆகும். சொத்தின் உரிமையாளர் யார் என்றால் திருநெல்வேலி சீவலப்பேரி அன்னதான சத்திரம் மேடைத்தளவாய் அறக்கட்டளைக்கு பாத்தியப்பட்டது ஆகும். மேற்படி உரிமையாளர் வாதிக்கு அடவோலை எதுவும் எழுதிக் கொடுக்கவில்லை என்றால் குத்தகைதாரர் என்று கொடுத்துள்ளார். நிலத்தின் உரிமையாளருக்கு வாதி பாட்டம் எவ்வளவு கொடுத்தார் என்று தெரியுமா என்றால் தெரியும். பாட்டம் செலுத்தியதற்கு இரசீது எதுவும் இல்லை என்றால் சரியல்ல.

2. வாதியின் பெயர் கட்டுகுத்தகை விவசாயி என்ற பதிவேட்டில் இல்லை என்றால் எனக்கு நியாபகமில்லை. வாதி கட்டுகுத்தகை விவசாயி என்பதைக் காட்டுவதற்கு வருவாய் துறையில் இருந்து எந்த வித சான்றிதழும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. வாதி கட்டுகுத்தகை விவசாயி என்று பதிவு செய்வதற்கு கடந்த 01.06.2026ம் தேதியன்று என்னிடம் காட்டப்படும் விசாரணை அறிவிப்பு ஒன்று எனக்கு வந்ததா என்றால் எனக்கு நியாபகம் இல்லை.

3. என்னிடம் காட்டப்படும் ஆவணம் வருவாய் துறையில் கட்டுகுத்தகை விவசாயி–ஆக பதிவு செய்வதற்கு எனது சகோதரர் எனது பெயருக்கும் விசாரணையில் ஆஜராக சொல்லி மனு செய்துள்ளார் என்றாலும் அந்த விசாரணை அறிவிப்பில் எனது பெயர் உள்ளது என்றாலும் சரிதான். வாதி எனது

சகோதரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி அறிவிப்பு எனக்கும் தபால் முறையில் வந்து சேர்ந்தது என்றாலும் நான் வழக்கிற்காக வரவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL

Deposition upoloaded on 16.06.2026
Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2026.06.16 18:48:47 +0530

2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி.